**04.03.2024 அ.வ.எண்.20/2013 வா.சா.1, அப்துல் சலிம் த/பெ. அப்துல் சமத்**

**குறுக்கு விசாரணை**

எனது தந்தை வழி பாட்டனார் பெயர் சோட்டே சாயப். அவரது தந்தை பெயர் தஸ்தகீர் சாயப். சோட்டே சாயப்-ற்கு இரண்டு மகன்கள் ஒரு மகள். அவர்கள் என் தந்தை மற்றும் அப்துல் ஜபார் மற்றும் சைதானி பீ ஆவர். சைதானி பீ-ன் கணவர் பெயர் சையத் அப்துல் காதர். சையத் அப்துல் காதர் -ன் தந்தை பெயர் ஜெயினுலாபுதீன். சையதானி பீ-ன் பிள்ளைகள் சையத் உமர், சையத் அமீன், (1, 2 பிரதிவாதிகள்) மற்றும் சையத் இஸ்மாயில் மற்றும் சையத் உமர், அப்ஷல் உன்னிஸா ஆகியோர் ஆவர். எனது தந்தை 1997-ல் இறந்துவிட்டார். என் தாயார் பெயர் தாகீருன் நிஷா ஆகும். என் உடன் பிறந்தவர்கள் அப்துல் சலாம், மும்தாஜ் பேகம், சர்தாஜ் பேகம், சம்ஷாத் பேகம் ஆகியோர் ஆவர். என் தாயாரின் சொந்த ஊர் கர்நாடக மாநிலம் கோலார் தங்க வயல் ஆகும். எனது தாயார் எனது தந்தையை திருமணம் செய்து கொள்வதற்கு முன்னர் அவருக்கு வந்தவாசியில் சம்மந்தமில்லை என்பது சரிதான். எனது பாட்டனார் சோட்டே சாயப்புவின் சொத்துகளை எனது தந்தை இறக்கும்வரை பாக பிரிவினை செய்துக் கொள்ளவில்லை. சைதானி பீ 1989-ல் இறந்தார். வா.த.சா.ஆ-1 பாக பிரிவினை ஆவணத்தில் பி அட்டவணை 9-வது இனமாக காட்டப்பட்டுள்ளது தான் வழக்கு சொத்து என்பது சரிதான். வழக்கு சொத்து சோட்டே சாயப் கிரயம் வாங்கியது என்பது சரிதான். அந்த விவரம் 09.07.1935 என்றும் ஆவண எண்.1526/1935 என வா.த.சா.ஆ-1 -ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை எனது பாட்டனார் ஒரு சர்வர்கான், பியான் பீ, காசிம் பேக் ஆகியோரிடம் கிரயம் வாங்கியுள்ளார். பாக பிரிவினை ஆவணம் எழுதியபோது 1935-ம் வருடத்திய முன் ஆவணத்தை எடுத்து சென்றோம். அந்த முன் ஆவணம் தற்போது என்னிடம் இல்லை. அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் வழக்கு சொத்தின் நான்கு பக்க அளவுகள் மற்றும் எல்லை விவரங்கள் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். 1935-ம் வருடத்திய கிரய ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலாது. மேற்படி ஆவணத்தின் சான்று நகல் சாட்சியிடம் காட்டப்பட்டபோது அது மேற்படி கிரய ஆவணத்தின் சான்று நகல்தான் என சாட்சி ஒப்புக்கொள்கிறார். மேற்படி கிரய ஆவணத்தின் சான்று நகலில் கண்ட சொத்து விவரம் முழுவதும் சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டபோது அத்தகைய விவரங்கள் அடங்கிய சொத்தைதான் சோட்டே சாயப் கிரயம் பெற்றுள்ளார் என சாட்சி ஒப்புக்கொள்கிறார். அந்த சொத்து விவரப்படி கிழக்கு மேற்கு அகலம் 24-3/4 அடி என்பது சரிதான். வடக்கு தெற்கு நீளம் 42-1/2 அடி என்பது சரிதான். 1935-ம் வருடத்திய கிரய ஆவணத்தில் கிரய சொத்தின் கிழக்கு மற்றும் தெற்கில் சையத் ஜெயினுலாபுதின் சாயப் வீடு மற்றும் காலி மனை இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்பது சரிதான். வா.த.சா.ஆ-1 பாக பிரிவினை ஆவணத்திலும் வழக்கு சொத்தின் அளவுகள் 1935-ம் வருடத்தின் கிரய ஆவணத்தில் கண்ட விவரங்களை அப்படியே சொல்லப்பட்டுள்ளது என்பது சரிதான். ஆனால், வா.த.சா.ஆ-1-ல் வழக்கு சொத்தின் கிழக்கு எல்லையாக சந்து என கூறியுள்ளோம்

என்பது சரிதான். 1,2 பிரதிவாதிகள் மேலே சொன்ன ஜெயினுலாபுதின் சாயப்-ன் பேரன்கள் என்பது சரிதான். மேற்படி ஜெயினுலாபுதின் சாயப்-ன் பழைய தட்டோட்டு வீட்டில் 1, 2 பிரதிவாதிகள் வசிக்கின்றனர் என்றால் 1-ம் பிரதிவாதி குடும்பத்துடன் வசிக்கிறார். மேற்படி ஜெயினுலாபுதின் வீட்டு மேல்புற சுவற்றிற்கும் சோட்டே சாயப் கிரயம் பெற்ற சொத்தின் கீழ்புற எல்லைக்கும் இடைப்பட்ட காலி இடம் எவ்வளவு என கேட்டால் கிழக்கு மேற்கு 9 அடி ஆகும். ஜெயினுலாபுதின் வீட்டிற்கு கிழக்கே உள்ள வீடு மற்றும் மனை அப்துல் முனாப் என்பவருடையது ஆகும். பழைய நத்தம் புல எண்.406/1 ஆனது நகர நில அளவையின் போது புதிதாக வரையறை செய்யப்பட்டு உட்பிரிவுகள் பிரிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டது என்பது சரிதான். அத்தகைய நகர நிலஅளவை எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பது எனக்கு தெரியாது. 2013-ல் எனக்கு பட்டா கொடுத்தார்கள். அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை வட்டாட்சியர் கொடுத்தார் அவர் ரெகுலர் தாசில்தாரா அல்லது ஸ்பெஷல் தாசில்தாரா என் கேட்டால் அது விவரம் தெரியாது. சோட்டே சாயப் கிரயம் வாங்கிய அடிப்படையில்தான் எனக்கு பட்டா கொடுத்தார்கள் என்பது சரிதான். இந்த வழக்கு சொத்து விவரத்தில் சொத்தின் அளவுகளை எதன் அடிப்படையில் தெரிவித்துள்ளேன் என கேட்டால் 1935-ம் வருடத்திய கிரயப்பத்திரத்தின் அடிப்படையில்தான் குறிப்பிட்டுள்ளேன். மேலும், வேறு வகையிலும் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள அளவிற்கு உரிமை உள்ளது. மேலும் 10 அடி அகலம் கொண்ட சொத்தை சோட்டே சாயப் கிரயம் வாங்கியுள்ளார். அந்த கிரய ஆவணம் கிடைக்கவில்லை ஆனால் சொத்து விவரத்தில் சொல்லியுள்ள அளவிற்கு எனது தந்தை மற்றும் சிறிய தந்தை பெயரில் பட்டா இருந்தது. அந்த பட்டாவை தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்தை எப்போது சோட்டே சாயப் கிரயம் வாங்கினார் என கேட்டால் 1935-ற்கு பின்னிட்டுதான் வாங்கியுள்ளார் ஆனால் எந்த வருடம் என தெரியாது சுமாராக 10, 15 வருடங்கள் கழித்து வாங்கியுள்ளார் ஏற்கனவே கிரயம் கொடுத்த அதே நபர்களிடம் சோட்டே சாயப் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி கிரயம் கொடுத்த நபர்களுக்கு 1935-ல் கிரயம் கொடுத்த பின்னரும் மேற்கொண்டும் இடம் இருந்தது என காட்ட ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என கேட்டால் அவர்களது பிள்ளைகளிடம்தான் கேட்க வேண்டும். அந்த 10 அடி அகலம் கொண்ட சொத்தானது 1935-ம் வருடத்திய கிரய ஆவணத்தில் கண்ட சொத்திற்கு கிழக்கிலும் ஜெயினுலாபுதின் வீட்டிற்கு மேற்கிலும் உள்ளது. நாங்கள் ஆழ்துளை கிணறு அமைக்க முற்பட்ட இடம் மேற்படி 10 அகலம் கொண்ட சொத்தில் அமைந்துள்ளது. அது 8-1/4 கஜம் மனைக்கு இரண்டு அடி கிழக்கில் தள்ளி உள்ளது. பாக பிரிவினை ஆவணத்தின் சொல்லப்பட்ட அளவுகளுக்குள் அந்த இடம் வரவில்லை என்பது சரிதான். 1935-ல் கிரயம் வாங்கிய மனையில் மாட்டு கொட்டகை இருந்தது அதில் வீடு கட்டுவதற்காக ஆழ்துளை கிணறு அமைத்தோம். புதிதாக வீடு கட்ட அனுமதியை நகராட்சியிடம் பெற்றோம். ஆனால் இதுவரை வீடு கட்டவில்லை. 1935-ம் ஆண்டின் கிரய ஆவணத்தின் கிரயம் கொடுத்தவர்களுக்கு சொத்து எப்படி பாத்தியம் என்பதை காட்டும்

முன் ஆவணம் எதனையும் பார்த்தேனா என கேட்டால் இல்லை. எனது பாட்டனார் அவரது சொத்துகளை பொறுத்து ஏற்பாடு எதுவும் செய்து வைக்கவில்லை. எனது பாட்டனார் இறந்த பிறகு அவரது சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு உரிமையானது என்பது சரிதான். சோட்டே சாயப்-ன் மனைவி 2003-ல் இறந்தார். சோட்டே சாயப் நான் பிறப்பதற்கு முன்னரே இறந்துவிட்டார். 1967 அல்லது 1968 ஆக இருக்களாம். சோட்டே சாயப்-ன் மனைவிக்கு கிடைத்த சொத்தை பொறுத்து அவர் ஏற்பாடு ஏதும் செய்து வைக்கவில்லை. சோட்டே சாயப்-ன் சொத்துகளில் சைதானி பீ -க்கு பாகம் கொடுத்ததாக பாக பிரிவினை ஆவணம் எழுதிக் கொள்ளவில்லை என்பது சரிதான். ஆனால், அவருக்கு நாங்கள் பாகம் கொடுத்தோம். வழக்கு சொத்தில் பாகம் சைதானி பீ-க்கு கொடுத்ததாகவோ அல்லது சைதானி பீ தனது பாகத்தை விடுதலை செய்ததாகவோ நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பது சரிதான். சோட்டே சாயப்-ன் சொத்து என் தாயார் பெயருக்கு எப்படி வந்தது என காட்டும் ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்பது சரிதான். பட்டாவில் அளவு கூடுதலாக இருந்ததால் எனது தாயாரை அழைத்து சென்று தானம் செட்டில்மெண்டு பத்திரம் எழுதி பெற்றேனா என கேட்டால் இருந்த அளவிற்குதான் எழுதி பெற்றேன். கட்டிட வரைபட அனுமதியை தாக்கல் செய்தேனா என கேட்டால் சாட்சி கட்டிட வரைபட அனுமதி பெறவில்லை என தெரிவிக்கிறார். வா.த.சா.ஆ.-1 பாக பிரிவினை ஆவணத்தில் எனது தாயார் பாகத்திற்கு ரூ-5,000/- ஒதுக்கியுள்ளோம் என்பதும் அவர் சொத்தில் பாகம் வேண்டாம் என தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளோம் என்பதும் சரிதான். பாக பிரிவினை ஆவணத்தில் எனது தாயாருக்கு அவரது ஜிவனத்திற்கு ஒதுக்கியதாக குறிப்பிடவில்லை. வழக்கு சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கும் அவர்களது சகோதர, சகோதரிகளுக்கும் 1/5 பாகம் உள்ளது என்றால் அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டோம். மேற்படி 1, 2 பிரதிவாதிகள் கூட்டு உடமையாளர்கள் என்றும் அவர்களுக்கு எதிராக உறுத்து கட்டளை கோர முடியாது என்றும் சொன்னால் அது சரியல்ல. சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள மீட்டர் அளவுகள் பட்டாவில் கண்டபடி தெரிவிக்கப்பட்டுள்ளன. பழைய பட்டாவில் என் சிறிய தந்தை பெயர் இருந்திருக்கும் பட்சத்தில் அவரும் சேர்ந்துதான் எனக்கு தானம் கொடுத்திருக்க இயலும் என்றால் அவரும் சேர்ந்துதான் எழுதிக்கொடுத்துள்ளார். ஆனால், வா.த.சா.ஆ.-2-ல் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் என் சிறிய தந்தையும் எழுதிக்கொடுத்ததாகத்தான் எனக்க ஞாபகம். வழக்குரையில் திருத்தம் மேற்கொண்டபோது சொத்து விவர அளவுகளையும் திருத்தியுள்ளேன் என்றால் அது விவரம் ஞாபகமில்லை. அவ்வாறு திருத்தத்தை எதன் அடிப்படையில் கோரினேன் என கேட்டால் பட்டா அளவுகளின்படி திருத்தம் கோரினேன். அத்தகைய பட்டா எதனையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே, பட்டா பற்றி நான் கூறும் சங்கதிகள் பொய் என்றும் சொன்னால் அது சரியல்ல. 1935-ம் வருடத்திய கிரய ஆவணத்தின் கண்ட சொத்துக்கு கிழக்கு புறம் உள்ள சொத்து ஜெயினுலாபுதின் சாயப்-க்கு சொந்தமானது என்றும் அது தற்போது 1,2 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றும் சொன்னால் அது சரியல்ல. அதற்கு மாறாக பொய்யான சங்கதிகளை தெரிவித்து வழக்காடுகிறேன் என்பது

சரியல்ல. 1935-ம் வருடத்திய கிரய ஆவணத்தின் சொத்துக்கு தென்புறம் உள்ள தங்களது சொத்திற்கு செல்ல ஜெயினுலாபுதின் சாயப் கிரய ஆவண சொத்தின் கீழ்புறம் சந்து விட்டிருந்தார் என்றும் அதனை அபகரிக்க பொய் பத்திரம் உருவாக்கியுள்ளேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. நகர நிலஅளவை திட்டத்தில் தவறான அளவுகளுடன் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனை ஆட்சேபித்து 1-ம் பிரதிவாதி மனு கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் அது சரியல்ல. 1-ம் பிரதிவாதி ஒரு சையத் சகாபுதின் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரயம் சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளேன் என்பது சரிதான். அந்த மனுவில் 1-ம் பிரதிவாதி நகர நிளஅளவையை ஆட்சேபித்துள்ளதை குறிப்பிட்டு கோட்டாட்சியர் முடிவு செய்ய உத்தரவிடப்பட்டது என்பது சரிதான். 1-ம் பிரதிவாதி கொடுத்த ஆட்சேபனை ரிட் மனு சம்மந்தப்பட்ட சொத்து மற்றும் இந்த வழக்கு சொத்து, வழக்கு சொத்திற்கு பின்புறம் உள்ள சொத்து ஆகியவை சம்மந்தப்பட்டது என்றால் வழக்கு சொத்து சம்மந்தமாக ஆட்சேபனை கொடுக்கவில்லை. ரிட் மனு சம்மந்தப்பட்ட சொத்தின் அளவுகள் திருத்தப்பட்டு உத்தரவிடப்பட்டது என்பது சரிதான். அதற்கான விசாரணையில் நான் ஆஜர் ஆனேன். வா.த.சா.ஆ-2-ல் சொத்தின் கிழக்கு மேற்கு தென்புற அகலம் 10 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை 10.6 மீட்டர் என வழக்குரையில் திருத்தியுள்ளதில் எது சரியென கேட்டால் வா.த.சா.ஆ-2-ல் கண்ட விவரம்தான் சரியானது. வழக்கு சொத்தில் ஒரு பகுதி தவறுதலாக பாக பிரிவினையில் சேர்க்கபடாமல் விடப்பட்டதாக நான் வழக்குரையில் தெரிவித்துள்ள நிலையில் என் தாயாருக்கு சொத்து அவரது வாழ்வாதாரத்திற்கு கொடுக்கப்பட்டதாக வா.த.சா.ஆ-2 -ல் சொல்லியுள்ள நிலையில் இதில் எது சரியென கேட்டால் இரண்டுமே சரிதான். என் அம்மா அந்த இடம் தனக்கு வேண்டும் என சொல்லிவிட்டதால் அந்த இடம் பாக பிரிவினையில் இடம் பெறவில்லை பின்னர் எனக்கு தானம் கொடுக்கும்போது அதனையும் எனக்கு சேர்த்து தானம் கொடுத்துவிட்டார். எனது தாயார் தானம் கொடுத்த சொத்து சோட்டே சாயப் 1935 கிரய ஆவணத்தில் கிரயம் பெற்ற சொத்தின் அடுத்த கீழ்புறம் உள்ளது. வா.த.சா.ஆ- 1, 2 -ல் கண்ட சொத்துகளின் நான்கெல்லை ஒன்றுதானா என கேட்டால் ஆமாம் ஒன்றுதான். பாக பிரிவினை ஆவணத்தில் சொத்தின் நான்கெல்லையில் எனது தாயார் ஒதுக்கிக்கொண்ட சொத்து இருந்ததாக குறிப்பிடப்பட்டதா என கேட்டால் குறிப்பிடப்பட்டுள்ளது. 10.01.2013 அன்று வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தோம். அதனை 14.01.2013 அன்று பிரதிவாதிகள் உடைத்துவிட்டனர். 09.01.2013 அன்றுதான் தான செடில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொண்டோம் என்பது சரிதான். முன் வழக்கு எண்.114/2013-ஐ மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்து நிலுவையிலுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எனக்கு ஏதும் உரிமையில்லை என்பது சரியல்ல. பாக பிரிவினை ஆவணத்தில் உரிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்றும் அதனால் அந்த ஆவணம் செல்லாது என்றும் சொன்னால் அது சரியல்ல. வா.த.சா.ஆ-2-ல் கண்ட சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்பது சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தில்

ஆழ்துளை கிணறு அமைக்க முயன்றதை பிரதிவாதிகள் தடுத்துவிட்டனர் என்பது சரியல்ல. எனது உறவினர்கள் காவல் துறையில் பணிபுரிந்தனர் என்றும் அந்த வகையில் வந்தவாசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த நபரும் எனது உறவினர் ஒருவரும் ஒரே பேட்சை சேர்ந்தவர்கள் என்பதால் திட்டமிட்டு பொய் புகார் உருவாக்கினோம் என்பது சரியல்ல. விளம்புகை கோராமல் தடை உத்தரவு மட்டும் கோரியது தவறு என்பது சரியல்ல.